R 4741 (page 14)

# தன்னை விற்றுப்போட்ட ஒரு ராஜா

## A DISCOURAGED PROPHET'S FLIGHT

1 இராஜாக்கள் 21

"பொருளாசையாகிய விக்கர ஆராதனைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்."
லூக்கா 12:15; கொலோசெயர் 3:5

எலியா ஆகாப் ராஜாவிடம் கூறியதாவது: "கர்த்தரின் பார்வைக்கு நீ பொல்லாப்பானதை செய்ய நீ உன்னை விற்றுப்போட்டாய்." பஞ்சத்தின் தாக்கம் படிப்படியாக மறைந்தது. ஆனால் அதன் அனுகூலமான பாடம் ராஜாவுடனும் ஜனங்களுடன் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு இருந்தது. உண்மையான தேவன் சில அங்கீகாரங்களை பெற்றார். பாகாலின் செல்வாக்கு ஒரு குறிப்பிடத்தக்க அளவு உடைக்கப்பட்டது. எலியாவுக்கு எதிரான ராணி யேசபேலின் வெளிப்படையான அச்சுறுத்தல் கவலையை அளித்தது. அவர் திரும்பி வந்து இஸ்ரயேலில் பல்வேறு தீர்க்கதரிசிகளின் பள்ளிகளை நிறுவி அவைகளுக்கிடையே அவரே பிரதான ஆவியாக இருந்தார்.

இன்றைக்கு நமது பாடம் ஒரு பொல்லாத ஸ்திரீயின் அற்பத்தனமான பேராசையையும் மோசமான வல்லமையையும் காண்பிக்கிறது. ஆகாப் இரண்டு அழகான அரண்மனைகளைப் பெற்றிருந்தான். அவற்றில் தந்தத்தினால் ஆன ஒன்று யெஸ்ரயேலில் இருந்தது. இவைகளையெல்லாம் அவன் பெற்றிருந்தும் கூட அவன் சந்தோஷமாக இல்லை. நாபோத் என்பவனின் நல்ல திராட்சத் தோட்டத்தை தனக்காக எடுத்துக்கொள்ள விரும்பினான். அதற்கு பதிலாக வேறோரு நல்ல திராட்சைத் தோட்டதையோ அல்லது அதற்கான பணத்தையோ கொடுப்பதாக கூறினான். நாபோத், அது தனது பிதாக்களின் சுதந்தரமாக இருந்ததினால் எந்த விலைக்கும் விற்க மறுத்தான்.

இதன் பலனாக ராஜா ஏமாற்றமும், மன வேதனையும், எரிச்சலும் அடைந்தான். அவன் இருதயத்தில் பேராசையை அனுமதித்தான். அந்த திராட்சைத் தோட்டத்தை விரும்பினான். அவன் ராஜாவாக இருந்தான். ஆகையால் நாபோத் மறுத்ததை அவமரியாதையாகக் கருதினான். தனது குடும்ப சுதந்தரத்தை விற்பதை தேவனுடைய பிரமாணம் தடை செய்கிறது என்பதால் அதை விற்க மறுப்பதாக அறிவித்தான். இது ஒரு பிரயோஜனமற்ற காரியமாக இருந்தது. ஆனால் ஆகாப் சலிப்புடனும் சினத்துடனும் வீட்டிற்கு வந்து போஜனம் பண்ணாமல் படுத்துக்கொண்டான்.

ராணி யேசபேல் வந்து, அவனது வருத்தத்திற்கான காரணத்தை கேட்டாள். அவனது பதிலைக் கேட்டு, அவள் அந்த தோட்டத்தை தான் அவனுக்கு தருவதாக கூறினாள். உடனே ஆகாப்பின் பெயரால் நிருபங்களை எழுதி, அவன் முத்திரையை இட்டு பட்டணத்தின் மூப்பருக்கு அனுப்பினாள். அவர்கள் விரும்பினபடி செய்கிற இரண்டு பேரை தெரிந்து கொள்ளும்படி கடிதங்களில் எழுதப்பட்டிருந்தது.

1. மத நிந்தை உண்டாகும்படி ஒரு உபவாசம் என்று பிரசித்தப்படுத்த வேண்டும்.
2. அவர்கள் நாபோத்தை கனம்பண்ணும்படி உபவாசத்தின் பிரதானமான இடத்தில் வஞ்சகமாக நிறுத்த வேண்டும்.

3. மோசடி செய்கிற இரண்டு பேரை ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்கள் உபவாசத்தில் தக்க சமயத்தில் மதத்தில் பக்தியுள்ளவர்களைப் போல நடித்து, நாபோத்துக்கு எதிராக, அவன் தேவனையும் ராஜாவையும் தூஷித்தான் என்றும் தங்கள் காதுகளால் அதைக் கேட்டோம் என்றும் ஒருவருக்கொருவர் உறுதிப்படுத்திக் கூற வேண்டும்.

4. தேவதூஷணத்திற்கு தண்டனையாக கல்லெறிந்து கொல்லும்படி அறிவித்து, தண்டனையை நிறைவேற்றி, இப்படியாக நாபோத்தை ஒழிக்க வேண்டும்.

யேசபேலின் இந்த மோசமான செயலை நாம் பலமாக எதிர்க்கிறோம். ஆனால் இக்காலத்திலும் இப்படிப்பட்ட காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ராணியின் யோசனைப்படி கல்லெறிந்து கொல்லும்படியான காரியம் இந்த நாகரீக தேசங்களில் நடக்காது என்பது உண்மை. எனினும் முற்காலத்தில் நான் வாழ்ந்திருந்தால் எனக்கு பிடிக்காதவர்களை கல்லெறிய சந்தர்ப்பம் இருந்திருந்தால் நான் செய்திருப்பேன் என்று கூறுகிறதை நாம் கேட்டிருக்கிறோம். உதாரணத்திற்கு எடுத்துக்கொள்வோம். ஒருவன் திறமையாக ஒரு வியாபாரத்தை செய்து கொண்டிருக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். பேராசையினால் தனக்கு உரிமையிருக்கிறது என்று கூறி போட்டியாக அண்டை வீட்டார் வியாபாரத்தை ஆரம்பிக்கிறார்கள். ஒருவேளை மற்றவன் வியாபாரத்தை முழுவதையும் எடுத்துக்கொள்ளும்படி குறைந்த விலைக்கு பொருட்களை விற்பனை செய்தால், மற்றவரை அவதூறு செய்தால் அது பேராசையின் செயல்பாடு இல்லையா? இது ஆகாப் ராஜாவின் செயல்பாடு இல்லையா? இது தேவனுடைய பார்வையில் கண்டிக்கத்தக்கது இல்லையா? **[R4742 : page 14]** தேவனை மதிக்கிறவர்கள் அவரது பொன்னான பிரமாணத்தை முழுமையாக புறக்கணிக்க தைரியம் கொள்வார்களா?

இன்னொரு உதாரணம்: ஒரு நல்ல வியாபாரம் செய்யும் ஒரு கடைக்காரருக்கு தற்போது மூன்று வருட ஒப்பந்தத்தின்படி பொருட்களை பெற்று வருகிற விலையைக் காட்டிலும் குறைந்த விலைக்கு விநியோகிக்க தயாராயிருக்கிறார். அதை அவர் ஏற்றுக்கொள்கிறார். ஆனால் முன்னால் அவருக்கு கடந்த மூன்று வருடமாக விநியோகித்து வந்தவர் வியாபார பேராசையினால் கோபமடைந்து, பணக்காரராக இருப்பதால், முதல் கடைக்காரர் வியாபாரம் ஆகாமல் மூடும் வரை நஷ்டத்தில் பொருட்களை விநியோகிக்கிறார். ஆகையால் புது கடைக்காரன் கடையை மூடிவிடுகிறார். இது ஒரு வியாபார கொலையாக இருக்கிறது. அது நாபோத்தை கொலை செய்திருந்தது. உண்மையிலேயே பேராசையும் யேசபேலின் முறையும் தற்காலத்தில் பயன்படுத்தப் படுகிறது. இப்படியாக பிறரது பாண்டு, பத்திரங்களையும் பொன், வெள்ளி முதலான வைகளையும் ஆசைப்படுகிறார்கள். ஆகாப் பொல்லாப்பானதை செய்ய தன்னை விற்றுப்போட்டான் என்று தேவன் கண்டனம் செய்தார். அப்படியென்றால், ஆகாப் காலத்தைக் காட்டிலும் வெளிச்சமும் அறிவும் அதிகமாயிருக்கும் இக்காலத்தில் செய்யும் காரியங்களுக்கு என்ன தண்டனை கொடுக்கப்போகிறார்?

## “அந்த ஸ்திரீ யேசபேல்”

ராஜாவின் விருப்பப்படி நாபோத் செத்தான் என்ற செய்தி யேசபேலுக்கு வந்தது. அவள் ஆகாபை நோக்கி, நாபோத் செத்துப்போனான். அவனது திராட்சத் தோட்டத்தை நீர் சொந்தமாக எடுத்துக்கொள்ளும் என்று கூறினாள்.

ராஜா மனசாட்சி இல்லாதவனாக இருந்தான். சில காரியங்களில் ராணியைப் போல மோசமானவனாக இருந்தாலும் தைரியம் இல்லாதவனாக இருந்தான். நாபோத்தின்

திராட்சத் தோட்டத்தை சொந்தமாக்கிக் கொள்ளும்டி எல்லா காரியங்களையும் செய்தான். எனினும் தான் கணக்குக் கொடுக்க வேண்டிய நீதியுள்ள தேவன் ஒருவன் இருக்கிறார் என்பதை அவன் உணரவில்லை.

பிறகு எலியா தேவ கட்டளைப்படி, எழுந்து சென்று ராஜாவை சந்தித்து கர்த்தரின் கட்டளைப்படி கூறியதாவது:" நீ கொலை செய்ததும் அவனுடையதை எடுத்துக்கொண்டதும் இல்லையோ? நாய்கள் நாபோத்தின் இரத்தத்தை நக்கின இடத்தில் உன்னுடைய இரத்தத்தையும் நாய்கள் நக்கும்." இந்த தீர்க்கதரிசனம் ஆகாப்பின் மேல் சீக்கிரத்தில் நிறைவேறியது. ராஜாவின் மனோபாவத்தை கவனியுங்கள். அவன் கர்த்தரை மறந்து, வெறும் தீர்க்கத்தரிசியை நினைத்தான்.

ஆகாப் எலியாவை நோக்கி கூறியதாவது: "என் பகைஞனே, என்னைக் கண்டு பிடித்தாயா?" அதற்கு எலியாவிடமிருந்து வந்த பதிலாவது: "கண்டுபிடித்தேன்; கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதைச் செய்ய நீ உன்னை விற்றுப்போட்டாய்."

பேராசை என்பது தற்காலத்தின் மிகவும் மோசமான தீமையாக இருக்கிறது. அது மற்ற எந்த பாவத்தைக் காட்டிலும் மிகுந்த மன வேதனையையும் துன்பத்தையும் தருவதாக இருக்கிறது.

-----------------